## தலைப்புச் செய்திகள்

1. தேசிய ஜனநாயக கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், மக்கள் நல் பணிகள் குறித்து ஆக்கப்பூர்வ விவாதங்கள் நடைபெற்றதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாட்டில் 2 லட்சம் புதிய கூட்டுறவு சங்கங்களை அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.
3. தமிழ்க் கனவு திட்டத்தின் மூன்றாம் கட்டம் இன்று தொடங்குவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
4. திமுக ஆட்சியில் தமிழக அரசின் கடன் சுமை அதிகரித்துவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
5. சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி இன்று தொடங்குகிறது.

<<<<>>>>

தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், மக்கள் நல் பணிகளில் கவனம் செலுத்துவது குறித்து ஆக்கப்பூர்வ விவாதங்கள் நடைபெற்றதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் நல்லாட்சி நடைமுறைகள் குறித்தும், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விவாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 2 லட்சம் புதிய கூட்டுறவு சங்கங்களை அமைக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

தமது அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், இதுவரை 35 ஆயிரத்து 395 புதிய கூட்டுறவு சங்கங்கள் தொடங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் வெண்மைப் புரட்சியின் இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ் அடுத்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு 50 சதவீதம் அதிகரிக்கப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகளை மாற்றியமைப்பதற்காகத்தான் புதிய தேசிய கூட்டுறவுக் கொள்கையை அரசு அறிமுகப்படுத்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கூட்டுறவுத் துறையில் அளிக்கப்படும் பயிற்சியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் திரிபுவன் கூட்டுறவு பல்கலைக்கழகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டிருப்பதையும் திரு. அமித் ஷா சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

**நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதில் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் உறுதிப்பாட்டிற்கு, ஆபரேஷன் சிந்தூர் சான்றாக அமைந்துள்ளது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த நடவடிக்கை பிரதமரின் உறுதியான தலைமைப் பண்பை எடுத்துக்காட்டுவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் எத்தகைய சவால்களையும் நாடு அச்சமின்றி எதிர்கொண்டு வெற்றிபெறும் என்பதையும் ஆபரேஷன் சிந்தூர் எடுத்துக்காட்டுவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

**தமிழ்க் கனவு திட்டத்தின் மூன்றாம் கட்டம் இன்று தொடங்குவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ஓராண்டு இடைவெளிக்குப் பிறகு தமிழ்க் கனவு திட்டம் மீண்டும் தொடங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூக சமத்துவம், தமிழ் மரபு, தமிழர் தொன்மை, பண்பாட்டுச் செழுமை, மொழி முதன்மை, இலக்கிய வளமை, கலைப் பன்மை, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றை இளைய தலைமுறையினரிடம் எடுத்துச் செல்வதே இதன் நோக்கம் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தில் 50க்கும் மேற்பட்ட பல்துறை ஆளுமைகள், 200 கல்லூரிகள் மற்றும் 2 லட்சம் மாணவர்கள் பங்கேற்பதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

**வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.**

இத்திட்டத்தின் கீழ் சென்னை கவியரசு கண்ணதாசன் நகர், முல்லை நகர், தண்டையார்பேட்டை பேருந்து நிலையங்கள் மற்றும் தண்டையார்பேட்டை ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்க கட்டுமானப் பணிகளை பார்வையிட்ட பின், செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் வடசென்னையில் மொத்தம் 282 பணிகள் நடைபெற்று வருவதாகவும், இவற்றில் 80 சதவீதப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளிடம் அறிவுறுத்தி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சென்னையை அடுத்த கூத்தம்பாக்கம், ஆவடி மற்றும் செங்கல்பட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையங்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டுக்கு வரும் என்றும் திரு. சேகர் பாபு தெரிவித்தார்.

<<<<>>>>

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பகுதியில் கீழ்பவானி வாய்க்கால் தொட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவை சீரமைக்கும் பணிகள் இன்று மாலைக்குள் முடிவடையும் என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. முத்துசாமி கூறியுள்ளார்.

வண்டிப்பாளையம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகளை பார்வையிட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் தமிழக அரசின் கடன் சுமை அதிகரித்துவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், நாடு விடுதலை பெற்ற 75 ஆண்டுகளில் மொத்தம் 5 லட்சத்து 18 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கப்பட்ட நிலையில், திமுகவின் கடந்த 4 ஆண்டுகால **ஆட்சியில்** மட்டும் **4 லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கியிருப்பதாக** குற்றம் சாட்டினார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட அம்மா மினி கிளினிக்குகள் மூலம் ஏழை மக்கள் மருத்துவ உதவி பெற்று வந்த நிலையில், திமுக அரசு அதனை மூடிவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாமக்கல் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் மாவட்ட அளவிலான இளையோர் செஞ்சிலுவைச் சங்க தன்னார்வலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

இதில் சேலம் பெரியார் பல்கலைக்கழக இளையோர் செஞ்சிலுவைச் சங்க மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு. இளங்கோவன் மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்துகொண்டு சமூக ஊடகங்களை மாணவர்கள் கவனத்துடன் கையாள்வது குறித்து எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

*இருவாரச் செய்திகள்*

இஸ்ரேல் நாட்டின் Ben Gurion விமான நிலையத்தை தாக்கும் நோக்கத்துடன் ஏமனின் ஹவுத்தி அமைப்பினர் செலுத்திய ஏவுகணையை இடைமறித்து அழித்துவிட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

--------------

இலங்கையில் காவல்துறை ஐ.ஜி. தேசபந்து தென்னக்கூனை பதவிநீக்கம் செய்வதற்கான தீர்மானம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

------------

மேற்குவங்க மாநிலத்தில் முக்கியமான தகவல்களை தேவையற்ற நபர்களுக்கு தெரிவித்த தேர்தல் அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்யுமாறு தேர்தல் ஆணையம் அம்மாநில அரசை அறிவுறுத்தியுள்ளது.

--------------

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் உள்ள ஒரு கோவில் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாத இயக்கத்துடன் தொடர்புடைய 19 இடங்களில் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

-------------

மதுரை மாவட்டத்தில் வணிக வரித்துறை பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் எடமச்சி ஊராட்சியில் கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தி நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்க வழங்கினார்.

------------

தூத்துக்குடி மற்றும் ஸ்ரீபெரும்புதூரில் அமைக்கப்பட்டு வரும் E.S.I. மருத்துவமனைகள் இந்த ஆண்டு இறுதிக்குள் பயன்பாட்டுக்கு வரும் என்று தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகத்தின் தென்மண்டல இயக்குநர் திரு. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

--------------

நாகையில் நடைபெற்று வரும் புத்தகத் திருவிழாவின் ஒரு பகுதியாக ஆதிவாசிகள் நடனம் மற்றும் மண்மேளம் இசை நிகழ்ச்சிகளை ஏராளமான பார்வையாளர்கள் கண்டு களித்தனர்.

-----------

ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகேயுள்ள மாம்பாக்கம் எட்டியம்மன் ஆலய ஆடித் திருவிழாவை ஒட்டி பக்தர்கள் நூதன முறையில் நேர்த்திக் கடன் செலுத்தி வழிபட்டனர்.

--------------

திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் பெரு நிறுவன சமூக பங்களிப்பு நிதி மற்றும் பெரு நிறுவன சுற்றுச்சூழல் பங்களிப்பு தொடர்பான மாநாடு ஆட்சியர் திரு. பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது.

இரு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் எரிகேசி, விதித் குஜராத்தி உள்ளிட்டோர் இன்று களமிறங்குகின்றனர்.

இதேபோன்று சாலஞ்சர்ஸ் பிரிவில் ஹரிகா துரோனவள்ளி, வைஷாலி ரமேஷ் பாபு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

-------------

**ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்திய வீராங்கனைகள் 7 பேர் பதக்க வாய்ப்பை உறுதி செய்துள்ளனர்.**

**-------------**

**அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலக டேபிள் டென்னிஸ் குழு சாம்பியன் போட்டியில் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுகளில் தலா 64 அணிகள் பங்கேற்கும் என்று சர்வதேச டேபிள் டென்னிஸ் சம்மேளனம் அறிவித்துள்ளது.**

**--------------**

**ஆசியக் கோப்பை கூடைப்பந்துப் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் ஜோர்டான் அணி, இந்திய அணியை 91-84 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.**

<<<<The End>>>>